## 11 டிசம்பர் 2023 நடப்பு நிகழ்வு கேள்விகள்

**1) "என் கிராமம் என் பாரம்பரியம்" என்னும் திட்டத்தை தொடங்கிய அமைச்சகம்**

a)விவசாய அமைச்சகம்

b)கலாச்சார அமைச்சகம்

c)பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

d)ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**2) சத்தீஸ்கர் மாநிலத்தின் நான்காவது முதலமைச்சர்**

a)அஜித் ஜோகி

b)ராமன் சிங்

c)பூபேஷ் பாகேல்

d)விஷ்ணு தியோ சாய்

**3) தேசிய குற்ற ஆவணங்கள் செயலகத்தின் அறிக்கையின் படி நாட்டின் பாதுகாப்பான நகரம்**

a)மும்பை

b)சென்னை

c) புதுடெல்லி

d)கொல்கத்தா

**4) "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாடலை எழுதியவர் யார்**

a)வண்ணதாசன்

b)பாரதிதாசன்

c)சக்திதாசன்

d)கண்ணதாசன்

**5) சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம்**

a)டிசம்பர் 8

b)டிசம்பர் 9

c)டிசம்பர் 10

d)டிசம்பர் 11

**6) 27வது WAIPA(முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனங்களின் உலக சங்கம்) உலக முதலீட்டு மாநாடு நடைபெற்ற இடம்**

a)மும்பை

b)கொல்கத்தா

c)சூரத்

d)புது டெல்லி

**7) அமிரித் பாரத் நிலைய திட்டம் தொடங்கிய அமைச்சகம்**

a)பொது விமான போக்குவரத்து அமைச்சகம்

b)சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம்

c)ரயில்வே அமைச்சகம்

d)கப்பல் போக்குவரத்து அமைச்சகம்

**8) கிராம மஞ்சித்ரா செயலி தொடங்கிய அமைச்சகம்**

a)விவசாய அமைச்சகம்

b)கலாச்சார அமைச்சகம்

c)பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

d)ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**9 ) பிரதம மந்திரி கிசான் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு**

a)2018

b)2019

c)2020

d)2021

**10) சர்வதேச மனித உரிமைகள் தினம்**

a)டிசம்பர் 8

b)டிசம்பர் 9

c)டிசம்பர் 10

d)டிசம்பர் 11

**விடைகள்**

**1)விடை b)கலாச்சார அமைச்சகம்**

“என் கிராமம் என் பாரம்பரியம்” என்னும் திட்டத்தை தொடங்கிய அமைச்சகம் கலாச்சார அமைச்சகம் ஆகும் .இந்திரா காந்தி தேசிய கலை மையத்துடன் (IGNCA) ஒருங்கிணைந்து கலாச்சார வரைபடத்திற்கான தேசிய இயக்கத்தின் கீழ் கலாச்சார அமைச்சகம் ' என் கிராமம் என் பாரம்பரியம் ' திட்டத்தைத் தொடங்கியது. 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய இந்தியாவின் 6.5 லட்சம் கிராமங்களை ஒரு விரிவான மெய்நிகர் தளத்தில் கலாச்சார ரீதியாக வரைபடமாக்குவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மக்கள் இந்தியாவின் மாறுபட்ட மற்றும் சிறப்பான கலாச்சார பாரம்பரியத்தில் தங்களை மூழ்கடிக்க ஒரு வாய்ப்பைப் பெறுவார்கள். இந்தத் திட்டத்தின் பின்னணியில் உள்ள முக்கிய யோசனை இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களை பாராட்டுவதை ஊக்குவிப்பதும், பொருளாதார வளர்ச்சி, சமூக நல்லிணக்கம் மற்றும் கிராமப்புற சமூகங்களில் கலை வளர்ச்சிக்கு வழிவகுப்பதும் ஆகும்.

2) விடை **d)விஷ்ணு தியோ சாய்**

2023 சட்டமன்றத் தேர்தலின் முடிவாக சத்திஸ்கர் மாநிலத்தின் நான்காவது முதலமைச்சராக விஷ்ணு தியோ சாய் நியமிக்கப்பட்டார். சட்டிஸ்கர் மாநிலம் 2000 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் உருவாக்கப்பட்டது .

| வரிசை எண் | பதவிக்காலம் | முதலமைச்சர் |
|---|---|---|
| 1 | 2000-2003 | அஜித் ஜோகி |
| 2 | 2003-2018 | ராமன் சிங் |
| 3 | 2018-2023 | பூபேஷ் பாகேல் |

3) **விடை d)கொல்கத்தா**

தேசிய குற்ற ஆவணக் செயலகத்தின் (NCRB) சமீபத்திய அறிக்கையின்படி, கொல்கத்தா தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக அங்கீகரிக்கக்கூடிய குற்றங்களின் (IPC) விகிதம் 78.2 உடன் இந்தியாவின் பாதுகாப்பான நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் தமிழகத்தில் உள்ள சென்னை மற்றும் கோவை முறையே 2 மற்றும் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளன . குஜராத்தில் உள்ள சூரத் 4 ஆம் இடமும் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள புனே நகரம் 5 ஆம் இடம் பிடித்துள்ளது .

4) விடை **c)சக்திதாசன்**

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பெண்களின் விடுதலை குறித்த பாடலை எழுதியவர் சக்திதாசன் என்ற மறுபெயர் கொண்ட புகழ்பெற்ற மகாகவி பாரதியார் ஆவார் இவர் இயற்பெயர் சுப்பையா என்னும் சுப்பிரமணியம் ஆகும் .1882 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் , திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார்.இவரோட பிறந்த நாளான இன்று தமிழகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது .

5) விடை **b)டிசம்பர் 9**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 9-ம் நாள் சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது. சமூகத்தில் ஊழலின் தீங்கு விளைவிக்கும் தாக்கம் குறித்து கவனத்தை ஈர்ப்பதும், இந்த உலகளாவிய பிரச்சினையை எதிர்த்துப் போராடுவதற்கான கூட்டு முயற்சிகளை ஊக்குவிப்பதும் இந்த நாளின் நோக்கமாகும். 2023 ஆம் ஆண்டின் சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தின் கருப்பொருள் "ஊழலுக்கு எதிராக உலகை ஒன்றிணைத்தல்" என்பதாகும். இந்த கருப்பொருள் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய முயற்சிகளை வலியுறுத்துகிறது மற்றும் லஞ்சம், பொது நிதியை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் நெறிமுறையற்ற நடைமுறைகளுக்கு பங்களிக்கும் எந்தவொரு சுயநல நோக்கங்களுக்கும் எதிராக நிற்பதில் நாம் அனைவரும் பகிர்ந்து கொள்ளும் கூட்டு பொறுப்பை எடுத்துக்காட்டுகிறது.

6)விடை **d)புது டெல்லி**

27 வது WAIPA (முதலீட்டு ஊக்குவிப்பு முகமைகளின் உலக சங்கம்) உலக முதலீட்டு மாநாடு புதுடெல்லியில் நடைபெற்று வருகிறது . உலக முதலீட்டு மாநாடு என்பது WAIPA இன் வருடாந்திர முதன்மை நிகழ்வாகும், இது உலகளாவிய முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் கண்டுபிடிப்பு பங்குதாரர்களுக்கான தளமாக செயல்படுகிறது. இந்த ஆண்டு, இந்த மாநாடு முதலீட்டு ஊக்குவிப்பு முகமைகள் (ஐபிஏக்கள்), சர்வதேச அமைப்புகள், கல்வியாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் உள்ளிட்ட தனியார் துறையை ஒன்றிணைத்து முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் போக்குகள் குறித்து விவாதிக்கிறது, ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடுகள் மற்றும் அறிவு பகிர்வுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

1995 ஆம் ஆண்டில் ஜெனீவாவில் ஒரு அரசு சாரா அமைப்பாக முதலீட்டு ஊக்குவிப்பு முகமைகளின் உலக சங்கம் உருவாக்கப்பட்டது. முதலீட்டு ஊக்குவிப்பு முகமைகள் தங்கள் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் ,பொது மற்றும் தனியார் துறைகளுக்கு இடையே ஒரு பாலமாக செயல்படுவதற்கும்

அவர்கள் செய்யும் முக்கியமான பணிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் ஆதரவளிப்பதே இதன் நோக்கமாகும்.

7)விடை **c)ரயில்வே அமைச்சகம்**

இந்திய ரயில்வேயில் ரயில்வே நிலையங்களை மேம்படுத்துவதற்காக ரயில்வே அமைச்சகம் அம்ரித் பாரத் ரயில் நிலைய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1309 ரயில் நிலையங்கள் சேர்க்கப்பட்டுள்ளன .தமிழகத்தில் 75 ரயில் நிலையங்கள் இந்த திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன .

8)விடை **c)பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்**

பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் 'கிராம மஞ்சித்ரா' என்னும் புவியியல் தகவல் அமைப்பு(GIS) மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியது. இது கிராம பஞ்சாயத்துகளுக்கு திறமையான அடிமட்ட இடஞ்சார்ந்த திட்டமிடலுக்காக அதிகாரம் அளிக்கிறது மற்றும் செயலூக்கமான பங்கேற்பை ஊக்குவிக்கிறது.

9)விடை **b)2019**

பிரதம மந்திரி கிசான் திட்டம் என்பது நிலம் வைத்திருக்கும் விவசாயிகளின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பிப்ரவரி 2019 இல் தொடங்கப்பட்ட ஒரு மத்திய துறை திட்டமாகும். இந்த திட்டத்தின் கீழ், ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கும் மூன்று சம தவணைகளில் ஆண்டுக்கு ரூ .6,000 /- நிதி உதவி நாடு முழுவதும் உள்ள விவசாய குடும்பங்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடி பணப்பரிமாற்றம் (DBT) முறையில் மாற்றப்படுகிறது.விவசாயிகளை மையமாகக் கொண்ட டிஜிட்டல் உள்கட்டமைப்பு இந்த திட்டத்தின் நன்மைகள் இடைத்தரகர்களின் தலையீடு இல்லாமல் நாடு முழுவதும் உள்ள அனைத்து விவசாயிகளையும் சென்றடைவதை உறுதி செய்துள்ளது. பயனாளிகளை பதிவு செய்வதிலும் சரிபார்ப்பதிலும் முழுமையான வெளிப்படைத்தன்மையை கடைபிடித்து, மத்திய அரசு 11 கோடிக்கும் அதிகமான விவசாயிகளுக்கு ரூ .2.80 லட்சம் கோடிக்கு மேல் வழங்கியுள்ளது.

கிசான் இ-மித்ரா (செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருள் ) - விவசாயிகளின் டிஜிட்டல் உதவியை இந்திய அரசு உருவாக்கியுள்ளது, இது அவர்களின் கேள்விகளை அவர்களின் சொந்த மொழிகளில் பதில் அளிக்கிறது. இதன் மூலம் தொழில்நுட்ப தலையீடுகள் மூலம் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கிறது. கிசான் இ-மித்ரா விவசாயிகளின் தற்போதைய தொழில்நுட்ப மற்றும் மொழி தடைகளை நீக்குகிறது. கிசான்-இ மித்ரா, செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருள் தற்போது ஆங்கிலம், இந்தி, ஒடியா, தமிழ் மற்றும் வங்காள ஆகிய 5 மொழிகளில் கிடைக்கிறது.

10) விடை **c)டிசம்பர் 10**

மனித உரிமைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 ஆம் தேதி சர்வதேச சமூகத்தால் அனுசரிக்கப்படுகிறது. 1948 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட தினத்தை நினைவுகூரும் நாளாகும். 2023 கருப்பொருள்: "அனைவருக்கும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி".

***Copyright © by Adda247***
*All rights are reserved. No part of this document may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior permission of Adda247.*